**சுருக்கம்**

வேளாண்மை – உழவர் நலன் – மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 13.04.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்புகள் – நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வினை விவசாயிகளிடையே ஏற்படுத்த 2022-2023 ஆம் ஆண்டில் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்விளக்கங்கள், பயிற்சிகள், கருத்தரங்குகள் நடத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் (வேபொ1) துறை**

அரசாணை (நிலை) எண்: 106

நாள்: 24.05.2022
சுபகிருது வருடம், வைகாசி, 10
திருவள்ளுவர் ஆண்டு, 2053

படிக்க.

1. வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022-2023 – மானிய கோரிக்கை எண். 5, மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண். 15
2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கடித எண். SC1/15981/2022, நாள். 21.04.2022.

**ஆணை**

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 13.04.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற 2022-2023 –ஆம் ஆண்டுக்கான மானிய கோரிக்கை எண். 5-ன் மீதான விவாதத்தின் போது வெளியிட்ட அறிவிப்பு எண். 15-ல் பின்வருமாறு அறிவிக்கை வெளியிட்டுள்ளார் :-

"நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண்மை பொறியியல் தொழில் நுட்பங்கள் பற்றி விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த 2022-23-ம் ஆண்டில் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, செயல்விளக்கங்கள், பயிற்சிகள், கருத்தரங்குகள் நடத்தப்படும்".

த.பி.பா.,

மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில் தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அரசுக்கு கருத்துருவினை அளித்துள்ளார். அக்கருத்துருவில் தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

i. தமிழ்நாடு அரசு வேளாண்மையில் சமச்சீர் வளர்ச்சி மற்றும் நிலையான வளர்ச்சி அடைய, பல்வேறு கொள்கைகளையும் உத்திகளையும் வகுத்துள்ளது. வேளாண் உற்பத்தி மற்றும் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க, வேளாண் இடுபொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதும், வேளாண் பணிகளை உரிய நேரத்தில் முடிப்பதற்கு புதுமையான தொழில்நுட்பங்கள் பின்பற்றுவதும் இன்றியமையாததாகும். மண் மற்றும் நீர் மேலாண்மைக்கான முழுமையான அணுகுமுறை, வேளாண் இயந்திரமயமாக்கல், வேளாண் விளை பொருட்களை மதிப்புக்கூட்டுதல் மற்றும் சூரிய சக்தியை வேளாண்மைக்குப் பயன்படுத்துதல் போன்ற உத்திகளை கையாளுவதன் மூலம் வேளாண்மையில் நிலையான தன்மையை அடைய முடியும்.

ii. வேலையாட்கள் பற்றாக்குறை மற்றும் வேளாண் பணிகளை செய்து முடித்திட அதிக நேரம் தேவைப்படும் இன்றைய சூழ்நிலையில், வேளாண்மைப் பொறியியல் துறை, நிலத்தை தயார்படுத்துவது முதல் அறுவடை மற்றும் மதிப்புக்கூட்டுதல் வரை, வேளாண் இயந்திரமயமாக்கலை விவசாயிகளிடையே கொண்டு செல்வதில் முக்கிய பங்காற்றுகிறது. சிறந்த நீர் சேமிப்பு மற்றும் நீர் மேலாண்மை உத்திகளை கடைபிடித்து, விவசாயத்திற்கு தேவையான பாசன நீரை கிடைக்க வழிவகை செய்து வருவதால், விவசாயிகளின் மத்தியில் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

iii. மண் வள பாதுகாப்பு, புதிய நீர்ப்பாசன ஆதாரங்களை உருவாக்குதல், வேளாண்மையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில் நுட்பங்களை கையாளுதல் மற்றும் வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல் ஆகியவற்றில் வேளாண்மைப் பொறியியல் துறையானது விவசாயிகளுக்கு உதவி செய்து வருகிறது. வேளாண்மை தொழிலை மற்ற தொழிலுக்கு இணையாக, இலாபகரமான தொழிலாக மாற்றுவதற்கு கீழ்கண்ட திட்டங்களை சீரான முறையில், வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள் எந்தவித இடையூறும் இல்லாமல் "தொழில்நுட்பம் சார்ந்த சாதுர்யமான வேளாண்மையை (Smart Farming)" பின்பற்றுவதற்கு உதவும் வகையில், வேளாண்மைப் பொறியியல் துறை புதுமையான இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றிய செயல் விளக்கங்கள், பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தி விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது.

1. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்.
2. வேளாண் இயந்திரமயமாக்குதல்.

த.பி.பா.,

3. வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டுதல்.
4. சூரிய சக்தியை வேளாண்மையில் பயன்படுத்துதல்.
5. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு.
6. நீர் மேலாண்மை.
7. வேளாண் கட்டமைப்புகள்

வேளாண்மைப் பொறியியல் துறையானது, புதிய தொழில்நுட்பங்களை கண்டறிய, இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் (ICAR) பல்வேறு நிறுவனங்கள், அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு குழுமம், (CSIR), ICAR அங்கீகாரம் பெற்ற வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள், பிற அரசு நிறுவனங்கள், பல்வேறு வேளாண் பொருட்களுக்கான அரசு ஒப்புதல் பெற்ற நிறுவனங்கள், பிரபல தனியார் நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவு, புதுமையான உத்திகளைக் கையாளும் உள்ளூர் விவசாயிகள், நவீன தொழில்நுட்பங்கள் போன்றவற்றின் சமீபத்திய அனுபவத்தை உள்ளடக்கிய உள்நாட்டு தொழில்நுட்ப அறிவு (ITK) ஆகிய நிறுவனங்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறது. இத்துறையானது புதுப்பிக்கத்தக்க ஆற்றல், மண் வளம் மற்றும் நீர் பாதுகாப்பு, உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் இயந்திரமயமாக்கல் ஆகிய துறைகளில் உள்ள புதுமையான நடைமுறையில் உள்ள தொழில்நுட்பங்களை கண்டறிந்து, விவசாயிகளுக்கும் விவசாய தொழில் முனைவோர்களுக்கும் செயல் விளக்கங்கள் / பயிற்சிகள் / கருத்தரங்குகள் மூலம் அத்தொழில்நுட்பங்களைக் கொண்டு செல்கிறது.

பல்வேறு புதுமையான, புதிய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளான வாகனத்துடன் இயங்கும் தேங்காய் பறிக்கும் இயந்திரம், நிலக்கடலை பறிக்கும் கருவி, டிராக்டருடன் இயங்கக்கூடிய சேறு அகற்றும் கருவி, மினி டிராக்டருடன் இயங்கும் கரும்பு சோகை உறிக்கும் கருவி, டிராக்டருடன் இயங்கும் கல் அகற்றும் இயந்திரம், டிராக்டருடன் இயங்கும் கரும்பு மற்றும் காய்கறி நாற்று நடவு செய்யும் இயந்திரம், டிராக்டருடன் இயங்கும் வைக்கோல் கூட்டும் கருவி போன்றவை வேளாண்மைப் பொறியியல் துறையால் சமீபத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகைக் கட்டணத்தில் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு வருகின்றன. வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள மேற்கூறிய புதுமையான இயந்திரங்களை விவசாயிகளுக்கு செயல் விளக்கம் மூலம் கொண்டு செல்வது அவசியமாகிறது.

2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் தனது கருத்துருவில் விவசாயத்தில் விதைப்பு முதல் அறுவடை மற்றும் அறுவடைக்குப் பின்னர் உள்ள சேமிப்புக் காலம் வரை, பல்வேறு பணிகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்பணிகளை மேற்கொள்வதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படக் கூடும். பல்வேறு வேளாண்மைப் பணிகளை மேற்கொள்வதற்கு வேலையாட்கள் கிடைப்பது, இன்றைய சூழ்நிலையில் விவசாயிகள் எதிர் கொள்ளும் முக்கிய சவாலாகும். வேலையாட்கள் பற்றாக்குறை பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், விவசாயிகள் பல்வேறு வேளாண் பணிகளை உரிய நேரத்தில் மேற்கொள்ளவும், வேளாண் இயந்திரமயமாக்கல் மட்டுமே சாத்தியமான தீர்வாகும். நீர் சேமிப்பு என்பது

நீரை வீணாக்குவதையும், அதிகப்படியான நீரை பயன்படுத்துவதையும் குறைத்து, திறமையாகப் பயன்படுத்தும் நடைமுறையாகும். நீர் இன்றியமையாத, குறிப்பிட்ட அளவில் மட்டுமே உள்ள வளம் என்பதால், நீர் பாதுகாப்பு என்பது மிகவும் முக்கியமானதாகும். பண்ணை அளவிலான அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், வேளாண் விளை பொருட்களின் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புக்களைக் குறைத்து, மதிப்புக்கூட்டி, வேளாண் விளை பொருட்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிப்பதன் மூலம் விவசாயிகள் தங்கள் நிகர வருமானத்தை அதிகரிக்க உதவுகிறது.

வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க இந்நாளில் பெரும் தேவை ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் வேலையாட்களின் செலவு, தண்ணீர் பற்றாக்குறை ஆகிய பிரச்சினைகளை சமாளிக்கவும், அதிக வருமானம் பெறவும் பழைய இயந்திரங்களை பயன்படுத்தாமல் நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் அதிகத் திறன் கொண்ட இயந்திரங்களைப் பயன்படுத்த முன் வருகின்றனர். எனவே விவசாயிகள் சாதுர்யமான வேளாண்மையினை (Smart Farming) மேற்கொள்ள உதவும் வகையில் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில், புதுமையான தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளுக்கு வழங்குவது காலத்தின் தேவையாகும்.

எனவே, 2022-23 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறையால், தமிழகம் முழுவதும் விவசாயிகளின் நலனுக்காக, வேளாண்மைப் பொறியியல் சார்ந்த புதுமையான தொழில்நுட்பங்கள் / இயந்திரங்கள் குறித்து, விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 50 செயல் விளக்கங்கள் / பயிற்சிகள் / கருத்தரங்குகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது, என தெரிவித்துள்ளார்.

3. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் மேலும் தனது கருத்துருவில், சமீப ஆண்டுகளில் வேளாண்மை / தோட்டக்கலையில், , தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறிப்பிடத்தக்க நிலையை எட்டியுள்ளதெனவும், விவசாயிகளுக்கான தொழில்நுட்ப பரிமாற்றத்தின் ஒரு பகுதியாக, இத்திட்டம் பின்வரும் நோக்கம் மற்றும் உத்தியுடன் செயல்படுத்தப்பட உள்ளதெனவும் தெரிவித்துள்ளார் :-

I. விவசாயிகளின் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், விவசாயிகள் தங்கள் வயல்களில் உள்ள பயிர்களுக்கு ஏற்ற வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பிற புதுமையான வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், இதன் நோக்கமாகும்.

II. இத்திட்டத்தின் மூலம் வேளாண்மையில் அதிக உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அடைய, தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே கொண்டு செல்வதே முக்கிய நோக்கமாகும். சாதுர்யமான வேளாண்மை (smart farming) என்பது ஒரு வளர்ந்து வரும் தொழில்நுட்பமாகும். இந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பண்ணைகளை நிர்வகிப்பதின் மூலம், வேளாண் உற்பத்திக்குத் தேவையான மனித உழைப்பை மேம்படுத்துவது மற்றும் சாகுபடி செலவைக் குறைப்பது போன்ற உத்திகளை செயல்படுத்த வழிவகை செய்யப்படுகிறது.

த.பி.பா.,

III. பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து, நடைமுறைப்படுத்த வேண்டிய முக்கிய தொழில்நுட்பங்களை, வேளாண்மைப் பொறியியல் துறையின் அலுவலர்கள் நேரில் சென்று பார்த்து உரிய தகவல்களைப் பெற்றும், அந்த நிறுவனங்களுடன் கருத்துப் பரிமாற்றம் மூலம் கண்டறியப்பட்டும், இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

IV. உள்ளூர் விவசாயிகள் பயன்பெறும் வகையில், அந்தந்த பயிர் மற்றும் இடம் சார்ந்த செயல் விளக்கங்கள் / பயிற்சிகள் / கருத்தரங்குகள் நடத்தப்படும், உதாரணமாக, கரும்பு சாகுபடியை இயந்திரமயமாக்க, கரும்பு பயிரிடுவதற்கு ஏற்ற புதிய இயந்திரங்களின் செயல்பாட்டின் செயல் விளக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவை கரும்பு பயிரிடப்படும் பகுதிகளில் நடத்தப்படும். மேலும், விவசாயிகளின் வயலில், பாசன நீர் வீணாகாமல் இருக்கவும், விலைமதிப்பற்ற நீர் ஆதாரங்களை பாதுகாக்கவும், இரவு நேரங்களில் விவசாயிகள் நேரில் சென்று பம்பு செட்டுகளை இயக்கும்போது ஏற்படும் இன்னல்களை தவிர்க்கவும், கைபேசி (mobile phone) மூலம் இயங்கும் தானியங்கி பம்புசெட் கன்ட்ரோலர் குறித்து செயல் விளக்கம் மேற்கொள்ளப்படும். இத்தொழில்நுட்பம் மூலம் விவசாயிகள் எங்கிருந்தும் பம்புசெட்களை கைபேசி மூலம் ஆன் / ஆஃப் செய்யலாம். வெங்காயத்தை செடியில் இருந்து அகற்றும் கடினமான பணியை சமாளிக்கும் வகையில், இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம் (IIHR) உருவாக்கிய வெங்காயம் பிரித்தெடுக்கும் கருவியின் (Onion Detopper) செயல்விளக்கம், வெங்காயம் விளையும் இடங்களில் மேற்கொள்ளப்பட உள்ளது.

V. இவ்வாறான முயற்சிகளின் வாயிலாக விவசாயிகளின் கருத்துக்கள் பெறப்பட்டு, புதுமையான தொழில்நுட்பங்கள் பல்வேறு அரசு திட்டங்கள் வாயிலாக பிரபலபடுத்தப்பட உள்ளது.

4. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் மேலும், தனது கருத்துருவில், தமிழகத்தில் வேகமாக மாறிவரும் காலநிலை, பண்ணை வளம், பயிர் செய்யும் முறை, பாசன நீர் இருப்பு, வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டும் தொடர் மேலாண்மை (value chain management), நுகர்வோரின் விருப்பம், தேவை மற்றும் பற்றாக்குறை, விழிப்புணர்வு / அறிவு, தொழில்நுட்பம், தகவல், கண்டுபிடிப்பு, ஆலோசனைகள் போன்றவை ஒவ்வொரு விவசாயிகளுக்கும் கணிசமாக வேறுபடுகிறது. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, 2022-23 ஆம் ஆண்டில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல் விளக்கங்கள் / பயிற்சிகள் / கருத்தரங்குகள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சிகள் இந்த திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

த.பி.பா.,

5. **மேலும், தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் இத்திட்டத்திற்கான நிதி மற்றும் அதனை செயல்படுத்துவதற்கான கால அளவு குறித்து கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

1) தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல் விளக்கங்கள் / பயிற்சிகள் / கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அரசிடம் எந்த நிதியும் கோரப்படாதவாறு, தனியார் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் உதவியுடன் வேளாண்மைப் பொறியியல் துறையால், இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

2) பின்வரும் நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் மேற்கொள்ள முன்மொழியப்படுகின்றன.

| வ எண் | செயல் | காலம் | முடிவு |
|---|---|---|---|
| 1 | ஆராய்ச்சி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், விவசாயப் பல்கலைக்கழங்கள் போன்றவற்றிலிருந்து பல்வேறு தொழில்நுட்பங்களை அடையாளம் காணுதல் | ஏப்ரல் 2022 – ஜூலை 2022 | 100% |
| 2 | செயல்விளக்கங்கள் / பயிற்சிகள் / கருத்தரங்குகள், நடத்துவதற்கான இடங்களை உறுதி செய்தல், நிதி ஏற்பாடு செய்தல் மற்றும் திட்டம் செயல்படுத்துதல். | மே 2022- பிப்ரவரி 2023 | 100% |
| 3 | திட்டத்தினை ஆவணப்படுத்துதல் | மார்ச் 2023 க்கு முன் | 100% |

6. **மேலும், தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) இத்திட்டத்தின் மூலம் கீழ்க்காணும் பயன்கள் எதிர்நோக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.**

- வேளாண்மை மற்றும் தோட்டக்கலையில், பொறியியல் தொழில்நுட்பங்களை, தமிழகம் முழுவதும் தொழில்நுட்ப பரிமாற்றத்தின் மூலம் கொண்டு செல்ல நடவடிக்கைகள் கண்டறியப்பட்டிருக்கும்.

- இந்த நிதியாண்டிற்குள் மொத்தம் 50 எண்கள் செயல்விளக்கங்கள் / பயிற்சிகள் / கருத்தரங்குகள் நடத்தப்பட்டிருக்கும்.

**த.பி.பா.,**

- மாநிலம் முழுவதும் செயல்விளக்கங்கள் / பயிற்சிகள் / கருத்தரங்குகள் நடத்துவதன் மூலம், புதுமையான தொழில்நுட்பங்கள் / இயந்திரங்கள் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறையின் பல்வேறு திட்டங்கள் விவசாயிகளிடையே கொண்டு சேர்க்கப்பட்டிருக்கும்.
- நேரடி கள விளக்கக்காட்சிகள், டிஜிட்டல் பிளையர்கள் (Digital flyers), துண்டுப்பிரசுரங்கள், ஒலிஒளிக் காட்சிகள், சமூக ஊடகங்கள் வாயிலாக செயல்விளக்கங்கள் / பயிற்சிகள் / கருத்தரங்குகளை நடத்தி விவசாயிகளிடையே பரப்புவதன் மூலம், புதிய தொழில்நுட்பங்கள் விவசாயிகள் மத்தியில் பிரபலமாகி இருக்கும்.
- விவசாயிகள் விவசாயத் தொழிலை விட்டு விலகுவதை தடுத்து, அவர்கள் விவசாயத்தில் அதிக கவனம் செலுத்த உதவியாயிருக்கும்.
- தொழில்நுட்பங்கள் பரிமாற்றம் மற்றும் செயல்விளக்கங்கள் / பயிற்சிகள் / கருத்தரங்குகள் ஆகியவை விவசாயிகள் மற்றும் நுகர்வோரின் நலனுக்காக அவர்களின் விருப்பத்துடன் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ளார்.

7. எனவே, மாண்புமிகு அமைச்சர் வேளாண்மை – உழவர் நலன் அவர்கள் 13.04.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற 2022-2023-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண். 5-ன் மீதான விவாதத்தின் போது வெளியிட்ட அறிவிப்பு எண். 15-ல் நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வினை விவசாயிகளிடையே ஏற்படுத்த 2022-2023 ஆம் ஆண்டில் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்விளக்கங்கள், பயிற்சிகள், கருத்தரங்குகள் நடத்த அனுமதியாணையினை வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கோரியுள்ளார்.

8. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வினை விவசாயிகளிடையே ஏற்படுத்த 2022-2023 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் உதவியுடன் செயல்விளக்கங்கள், பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்த தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

9. தனியார் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நிதி குறித்த விவரங்கள், நடத்தப்பட்ட செயல் விளக்கங்கள், பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் குறித்த விவரங்கள் மற்றும் அதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயன்கள் குறித்த விரிவான அறிக்கையினை அரசுக்கு அனுப்பி--வைக்குமாறு தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா. எண். 23216 / நிதி (வே.உ.ந)/ 2022, நாள். 23.05.2022ன்படி பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

**பெறுநர்**
தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை -35.
மாநிலக் கணக்காயர், (G&SSA/E&RSA). சென்னை - 18

**நகல்**
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச்செயலாளர், வேளாண்மை-உழவர் நலத் துறை,
தலைமைச்செயலகம், சென்னை – 9.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு.3) துறை, சென்னை-9
(பட்டியல் படுத்தும் வகைக்கு).
நிதித் (வேளாண்மை - உழவர் நலன்) துறை, சென்னை-9.
உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை - 9.
இருப்பு கோப்பு / உதிரி

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

25.05.2022
பிரிவு அலுவலர்
25-05-22